<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.38/2019 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.3 |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : ராஜேஷ் கண்ணன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : சுப்பையா | ஜாதி | : | |
| கிராமம் | : | இனம் | : | |
| தாலூக்கா | : | வயது | : | |
| Mail ID | : | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 14.06.2023

**<u>எதிரி ஆஜரில் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு– 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. முதல் விசாரணை :</u>**

நான் பல்லடம் அறிவொளி நகரில் வசித்து வருகிறேன். நான் சஞ்சீவி பைனான்ஸ் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். 24.04.2019 அன்று காலை 11.30 மணிக்கு நான் கடையில் இருந்த போது உடுமலை போலீசார் வந்து ஒரு நபரை கூட்டி வந்தார்கள். அவரை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். அவர் இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட நபர் என்று சொன்னார்கள். மேற்படி நபர் எங்கள் நிறுவனத்தின் திருட்டு நகையை அடகு வைத்ததாக சொன்னார்கள். அது திருட்டு நகை என்று எனக்கு தெரியாது. எங்கள் பைனான்சில் மேற்படி நகையை வாங்கி அதன் தரத்தை பரிசோதனை செய்துவிட்டு அதற்குண்டான பணத்தை அடகு வைத்ததன் பேரில் கொடுத்தோம். மேற்படி பொருளை போலீசாரிடம் நான் நெக்லஸ் 1 பவுன், தொங்கும் தோடு ¾ ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்தேன். அதை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார்கள். அதில் நான் சாட்சியாக கையெழுத்து செய்தேன். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார்

என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(1) எங்களது பைனான்ஸ் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் அங்கு நகை அடகுக்கு வந்தால் வாங்கிக்கொண்டு பணம் கொடுப்பது என் பணி ஆகும். எங்களது நிறுவனம் பதிவு செய்யப்பட்டது என்பதை காட்ட பதிவுச் சென்று எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நகை அடகு பெறும் கடை வேறு பைனான்ஸ் கடை வேறு என்றால் சரிதான். எங்கள் நிறுவனத்தின் பெயர் சஞ்சீவி பைனான்ஸ் என்று தான் உள்ளது நகை அடகு கடை என்று இல்லை என்றால் சரிதான். வழக்குச் சொத்தான நகையை யார் அடகு வைத்தார்கள் என்று தெரியுமா என்றால் முகம்மது கனியும், பூங்கொடியும் சேர்ந்து அடகு வைத்தார்கள். அவர்கள் இருவரும் தான் அடகு வைத்தார்கள் என்றால் சரிதான்.

(2) நகையை அடகு வைக்க வந்த போது எதிரியை நான் பார்த்தேனா என்றால் இல்லை. போலீசார் நகையை கைப்பற்றிய போதும் எதிரியை பார்க்கவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு என்ன வயது இருக்கும் என்றால் 26 வயது இருக்கும். வழக்குச் சொத்தான நகை திருட்டு நகையா என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான. யாராவது அடமானம் வைக்குமாறு கூறி நகையை கொடுத்திருக்கலாம் என்றால் வாய்ப்புள்ளது. உடுமலை காவல் நிலையத்தில் இருந்து யார் வந்தார்கள் என்றால் உதவி ஆய்வாளர் வந்தார் பெயர் தெரியாது. என்னுடன் யார் கையெழுத்து செய்தார்கள் என்று தெரியாது நான் மட்டும் தான் கையெழுத்து போட்டேன். நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்து விட்டு தற்போது வழக்கிற்காக எங்களது நிறுவனத்தில் வைத்து கையெழுத்து செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-Vijayakumar,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

# DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 38/2019 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.4 |
| | | Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வெங்கட்ராஜ் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 14.06.2023

**எதிரி ஆஜரில் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு– 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. முதல் விசாரணை :**

நான் குன்னூரில் வசித்து வருகிறேன். அங்கு ராஜ் பைனான்ஸ் என்ற பெயரில் நகை அடகு கடை வைத்துள்ளேன். 24.04.2019 அன்று மதியத்திற்கு மேல் உடுமலை போலீசார் என் கடைக்கு வந்து அடமான ரசீது ஒன்றை கொண்டு வந்து காட்டினார்கள். அது என்னுடைய கடையில் இருந்து கொடுத்த அடகு ரசீது தான். மேற்படி ரசீதில் வைத்துள்ள நகை திருட்டு நகை என்று சொன்னார்கள். மேற்படி ரசீது **அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கம்மல் மற்றும் தொங்கட்டான் ஆகியவை சேர்ந்து 1 பவுன் மதிப்புள்ளது என்னிடம் இருந்து கைப்பற்றினார்கள். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையதுதான். **அந்த கையெழுத்து மட்டும் அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(1) போலீசார் என்னுடைய கடைக்கு சுமார் 02.30 மணிக்கு வந்தார்கள். எந்த போலீஸ் வந்தார் என்றால் ஆய்வாளர் வந்தார். நான் பைனான்ஸ் கடை நடத்தி வருவதற்கான உரிம ஆவணத்தை நான் போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. அடகு வைத்தவர் பூங்கொடி என்றால் சரிதான். மேற்படி பூங்கொடி அடகு வைக்க வந்த போது அவரது ஆதார் அட்டை, குடும்ப அட்டை போன்ற ஏதாவது ஒரு ஆவணம் வாங்கினேனா என்றால் இல்லை. ஆவணம் இல்லாமல் நகையை அடகு வாங்குவது தவறு என்று சொன்னால் நான் வாங்கி வைப்பதில்லை. அது சட்டப்படி தவறு என்றால் எனக்கு அது தற்போது தான தெரியும். நான் எத்தனை வருடமாக பைனான்ஸ் கடை வைத்துள்ளேன் என்றால் 35 வருடங்களாக பைனான்ஸ் கடை நடத்தி வருகிறேன்.

(2) நகை அடகு கடை நடத்தி வந்தால் என்ன மாதிரியான ஆவணங்களை பெற வேண்டும் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் சொன்னபடி பைனான்ஸ் கடை எதுவும் நடத்தி வரவில்லை என்றால் சரியல்ல. நான் மட்டும் தான் கையெழுத்து போட்டேனா என்றால் ஆமாம். மேற்படி அ.சா.ஆ.3.ஆவணம் என்னால் போலீசார் கேட்டுக்கொண்டதால் உருவாக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-Vijayakumar,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.